**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.96/2022** **P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | மாலதி | தொழில் |
| க/பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை 11.12.2024**

நான் இந்த வழக்கில் முதல் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். 1 முதல் 14 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. ம.சா.ஆ.1 - 17.02.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை.
2. ம.சா.ஆ.2 - 17.02.2022 தேதியிட்ட இறந்துபோன மாதவனின் உடல் கூராய்வு அறிக்கை சான்றிட்ட நகல்.
3. ம.சா.ஆ.3 - 22.02.2022 தேதியிட்ட இறந்துபோன மாதவனின் இறப்பு சான்றிதழ்.
4. ம.சா.ஆ.4 - 08.03.2022 தேதியிட்ட இறந்துபோன மாதவனின் வாரிசு சான்றிதழ்.
5. ம.சா.ஆ.5 - இறந்துபோன மாதவனின் சம்பள ரசீது.
6. ம.சா.ஆ.6 - இறந்துபோன மாதவனின் ஓட்டுநர் உரிமம் நகல்.
7. ம.சா.ஆ.7 - முதல் எதிர்மனுதாரரின் ஆர்.சி.புத்தகம் நகல்.
8. ம.சா.ஆ.8 - 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நகல்.
9. ம.சா.ஆ.9 - முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல்.
10. ம.சா.ஆ.10 - முதல் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.
11. ம.சா.ஆ.11 - 2வது இளவர் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.
12. ம.சா.ஆ.12 - 3வது இளவர் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.

13. ம.சா.ஆ.13 - 3வது இளவர் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.

14. ம.சா.ஆ.14 - முதல் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் கேள்விப்பட்ட சங்கதிகள்தான் என்றால் சரிதான். இந்த விபத்தானது எனது கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டு, பாளத்தின் தடுப்பு சுவரின் மேலிருந்து கீழே விழுந்ததினால் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது எனது கணவர் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து தேதியில் எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீது போடப்பட்ட முதல் தகவல் அறிக்கை மேல்நடவடிக்கை இன்றி முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் மீது விசாரணை முடிந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் மறுக்கிறேன். கருணை அடிப்படையில் எனக்கு பணி வழங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அதனால் எனக்கு வருமான இழப்பு எதுவும் எற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் வாகனம் இந்த விபத்தில் சம்பந்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனுவானது செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.96/2022** **P.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஷியாம் சுந்தர் | தொழில் | |
| க/பெ. | | மதம் | |
| கிராமம் | | சாதி | |
| வயது | | வட்டம் | |

**முதல் விசாரணை:- 11.12.2024**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். எனது ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். அதனை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. ம.சா.ஆ.15 - ஆதார் அட்டை நகல்.

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இறந்துபோன நபரும் நானும் ஒரே இடத்தில் வசித்தோம் என்றால் சரிதான். இறந்துபோன நபர் எனது உறவினர் என்றால் சரியல்ல, எனது பக்கத்து வீட்டுக்காரர். விபத்து சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரா் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் மறுக்கிறேன்.

**மறு விசாரணை:-**

இல்லை